*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.157/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.சக்கரவர்த்தி த/பெ. பெரியசாமி***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.05.2024.**
துவக்க நேரம் 02.49

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் கரியகோயில் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.05.2020ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் நான் கருமந்துறை காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியிலிருந்தபோது, நானும், என்னுடன் முதல்நிலைக்காவலர் திரு.சசிகுமார் அவர்களும் சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் தலைமையில், வாகன தணிக்கையில் இருந்தோம். அப்போது கீரைக்கடை பஸ்ஸ்டாப் அருகே TN 77 L 5877 என்ற பல்சர் இருசக்கரவாகனத்தில் வந்துகொண்டிருந்த இரண்டு நபர்களை நிறுத்தி விசாரித்தோம். ஆஜர் எதிரிகள்தான் மேற்படி இரண்டு நபர்கள் ஆவார்கள்.

2) அப்போது அதில் ஒருவர் அங்கிருந்து ஓடிவிட்டார். மற்றொரு நபர் அவரது பெயர் ராஜபிரபு த.பெ வெள்ளையன் என்று கூறினார். தப்பிச்சென்ற மற்றொரு நபரின் பெயர் ராமலிங்கம் த.பெ தீர்த்தன் என்றும் கூறினார். அவர்கள் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை பரிசோதித்தபொழுது, அதில் டேங்க் கவரில் உள்ள ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் கவரில் சுமார் 250 கிராம் எடையுள்ள கஞ்சா இருந்தது. அதனால் மேற்படி எதிரி ராஜபிரபுவை, சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் அன்றைய தினமே கைது செய்தார்.

3) குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி ராஜபிரபுவிடம், சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் சம்பவயிடத்தில் இருந்த சாட்சிகள் சந்தோஷ்குமார் மற்றும்

விஜய் ஆகியோர்கள் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் எதிரியிடமிருந்து 250 கி கஞ்சாவையும், அவர்கள் ஓட்டிவந்த TN 77 L 5877 என்ற பல்சர் இருசக்கரவாகனத்தையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில், சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்.

4) பிறகு எதிரி ராஜபிரபுவை நிலையம் அழைத்துவந்து, அவர் மீதும், தப்பிச்சென்ற எதிரி ராமலிங்கத்தின் மீதும் வழக்குப்பதிவு செய்ய நானும், சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். நடந்த சம்பவம் சம்மந்தமாக என்னிடம், சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கீரைக்கடை பஸ்ஸ்டாப் என்பது மக்கள் வசிப்பிட பகுதி என்றால் துாரதுாரமாக வீடுகள் உள்ளன. சார்பு ஆய்வாளர் அழைத்ததன்பேரில் தான் சம்பவயிடத்திற்கு நாங்கள் சென்றோம் என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லப்படும் கஞ்சாவை, சம்பவயிடத்திலேயே அளந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அருகில் உள்ள கடையில் அளந்துபார்த்தோம். கைப்பற்றதல் மகஜரை யார் எழுதினார்கள் என்றால் சார்பு ஆய்வாளர் தான் எழுதினார். கைப்பற்றியதாக சொல்லப்படும் கஞ்சாவை வைத்திருந்த பிளாஸ்டிக் பாக்கெட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை பார்க்கவில்லை என்றாலும், எதிரி ராஜபிரபுவிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் சார்பு ஆய்வாளர் பதிவு செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரிகளின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 02.59

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2, ஆத்தூர்.